# 14. புத்த சமயத்தில் இறைக்கொள்கை

முனைவர். ஞா.பிரான்சிஸ்கேதரின்
தமிழ்த்துறைத் தலைவர்,
ஜெ.அ. மகளிர் கல்லூரி, பெரியகுளம்.

**முன்னுரை:**

இறைக்கொள்கை என்பது மானிட சமுதாயத்தை நல்வழியில் வழிகாட்டும் தன்மையுடையதாகும். உலகமெல்லாம் பல சமயங்கள் காணப்படுகின்றன. எல்லா சமயத்திற்கும் அடிப்படையானது இறை நம்பிக்கை. சமயங்களிடையே சடங்குகள் வழிபாட்டு முறைகள் மாறினாலும் அடிப்படையில் இறைக்கொள்கை ஒன்றே என்று கூறலாம். சமயங்கள் இறையுணர்வை மக்கள் உள்ளத்தில் எழுப்புவதோடு மட்டுமல்லாமல் வாழ்க்கைக்குத் தேவையான நெறிகளையும் வலியுறுத்துகிறது. சமயம் என்பது மனிதனை, அவனுடைய புலன்களை நெறிப்படுத்தி செழுமைப்படுத்திப் பக்குவப்படுத்துவதே ஆகும். "மதம் என்பது மனித வாழ்விற்காக மனிதன் நடந்துகொள்ள வேண்டியதற்காக மனிதனுடைய முடிவான இலட்சியத்தை அடைய வேண்டியது என்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட வழிமுறை என்பதாகச் சொல்லலாம்" என ஜெரி குறிப்பிடுகிறார். சமயங்கள் பலவகையான பிரிவுகளை உள்ளடக்கியுள்ளன. அச்சமயங்களுள் உலக அளவில் மாண்புறத் திகழும் சமயங்களில் ஒன்றாகத் திகழ்வது புத்த சமயமாகும். இக்கட்டுரை புத்த சமயத்தில் இறைக்கொள்கை பற்றி ஆராய்கிறது.

**புத்தரின் போதனைகள்:**

உலகைத் துறக்க முற்படுபவர்கள் துறக்க வேண்டியவை இரண்டு 1. சிற்றின்ப வாழ்க்கை 2. கடுந்தவ வாழ்க்கை என்று புத்தர் கூறுகிறார். இந்த இரண்டையும் துறந்த நிலையில் தான் உள்ளொளியும், விடுதலைப் பேறும் கிடைக்கின்றன என்று கூறித் தான் கண்ட நான்கு வாய்மைகளையும் அவர் குறிப்பிடுகிறார்.

**நான்கு வாய்மைகள்:-**

"உணர்வே அருவுரு வாயில் ஊறே
நுகர்வே பிறப்பே பிணி மூப்புச் சாவே
அவலம் அரற்றுக் கவலை கையாறு என
நுவலப்படுவன நோயாகும்மே!



அந்நோய் தனக்குப்
பேதைமை செய்கை அவாவே பற்றுக்
கரும ஈட்டம் இவை காரணமாகும்
துன்பம் தோற்றம் பற்றே காரணம்
இன்பம் வீடே பற்றிலி காரணம்
ஒன்றிய உரையே வாய்மை நான்காவது"

(ப.அ.பா.நோ.கா.179 – 188.)

என்று மணிமேகலை குறிப்பிடுகிறது. இதையே திருக்குறள்,

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு" (குறள் 358)

என்று கூறுகிறது.

நான்கு வாய்மைகளுக்கான காரணங்கள்

| | | |
|---|---|---|
| துக்கம் | - | துன்பம் |
| துக்க காரணம் | - | துன்பத்திற்கான காரணம் |
| துக்க நிவாரணம் | - | துன்பத்தைப் போக்கல் |
| துக்க நிவாரண மார்க்கம் | - | துன்பத்தைப் போக்கும்வழி |

**துக்கம்:**

புலன்களால் உண்டாகும் பற்று துன்பம் தருவது. பிறத்தல், நோய், மூப்பு, சாவு இவற்றால் ஏற்படக் கூடிய துன்பங்கள் முதல் வாய்மை. அந்தத் துக்கத்திற்குப் பேதைமையும், செய்கையும், அவா, பற்று, கருமத்தொகுதி ஆகிய இவையே காரணமாகும் என்பது இரண்டாம் வாய்மை. துன்பத்திற்கும் தோற்றத்திற்கும் பற்றே காரணம் இது மூன்றாவது வாய்மை. இன்பத்திற்கும் வீட்டிற்கும் காரணமாவது பற்றின்மையே இது நான்காவது வாய்மை. இவையே நான்கு வகை வாய்மைகளாகும்.

**துக்க நிவாரண மார்க்கம்:**

துன்பத்தைப்போக்கி வீடுபேற்றை அடைவதற்குரிய வழி என்னவென்றால் எட்டுவகை ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதாகும். அதற்கு அஷ்டாங்க மார்க்கம் என்று பெயர். துன்பத்திலிருந்து விடுதலை பெற எட்டுவகை ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து உன்னதப் புகழை அடைவதற்குப் புத்தர் காட்டிய சிறந்த வழி எட்டுவித ஒழுக்கமாகும். அவையாவன,

1.நற்காட்சி 2. நற்கருத்து 3. நல்வாய்மை 4. நற்செய்கை 5. நல்வாழ்க்கை 6. நல்முயற்சி 7. நற்கடைபிடி 8. நல்ல அமைதி ஆகியனவாகும்.



Scanned by CamScanner

உலகம் துன்பம் நிறைந்தது. நற்காட்சி என்பது ஆசையே துன்பத்திற்குக் காரணம். ஆசையை நீக்கினால் துன்பத்திலிருந்து விடுபடலாம். துன்பத்திலிருந்து விடுபட எண்வகை மார்க்கம் வழியாக அமைகிறது. இவற்றைப் பற்றி அறிந்திருப்பது நற்காட்சியாகும்.

நற்கருத்து என்பது புலன் இன்பங்களைத் துறந்து வாழ்தல், அகிம்சை நிலையில் நிற்றல் ஆகும்.

நல்வாய்மை என்பது பொய் பேசுதல், புறங்கூறுதல், பயனற்றப் பேச்சு பேசுதல் இவைகளை விலக்க வேண்டும். உண்மையாகவும், ஒருவருக்கொருவர் நட்பாகவும், அன்பாகவும் பேசுதலாகும்.

நற்செய்கை என்பது திருடுதல், உயிர்க்கொலை, சிற்றின்ப உணர்வு ஆகியவற்றிலிருந்து விலகி, பிறருக்கு நன்மை செய்யக் கூடிய அறச் செயல்களையே செய்தலாகும்.

நல்வாழ்க்கை என்பது நியாயமான முறையில் வாழ்க்கை நடத்த வேண்டும். பிறருக்குத் தீங்கு செய்யாமல் பிறருக்காக உழைப்பதே நல்ல வாழ்க்கையாகும்.

நல்முயற்சி என்பது மனமானது தூய்மையில் நிலைபெற்று இருப்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியே நல்முயற்சியாகும்.

நற்கடைபிடி என்பது உடல், மனம், ஆசை ஆகியவற்றை அடக்கி வாழ வேண்டும். மனதையும் உடலையும் தூய்மையாக வைக்க வேண்டும். இவைதான் நற்கடைபிடித்தல் ஆகும்.

நல்அமைதி என்பது மனதை ஒருமுகப்படுத்தி தியானத்தில் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் துறந்து பரிசுத்த நிலையை அடைதல் நல் அமைதியாகும்.

புத்த சமயம் எண்வகை ஒழுக்கத்தில் மக்களுக்குத் தேவையான நல்ல கருத்துக்களையும் சிறப்பாக வாழ்வதற்கான வழிமுறைகளையும் வெளிப்படுத்துகிறது.

**ஐவகைச் சீலங்கள்:**

மயக்கத்தைத் தரக்கூடிய கள்ளை உண்ணாமல் இருக்க வேண்டும். பொய் பேசாதிருத்தல், அதாவது உண்மையைப் பேசுதல் வேண்டும். முறை தவறிய சிற்றின்பத்தை நாடாதிருத்தல், உயிர்களைக் கொல்லாமல் இருத்தல், எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல், களவு செய்யாமல் இருத்தல் ஆகியவைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்று பௌத்த சமயம் ஐவகைச் சீலங்கள் பற்றிக் கூறுகிறது.





" கள்ளும் பொய்யும் காமமும் கொலையும்
உள்ள களவும் என்று உரவோர் துறந்தவை"
(ஆ.நா.அ.கா.77-78 )

என மணிமேகலை கூறுகிறது. கள்ளுண்ணாமை, பொய் பேசாமை, காமம் கொள்ளாமை, கொலை செய்யாமை, உள்ளத்தில் களவு செய்ய எண்ணாமை ஆகிய இவ்வைந்தையும் பஞ்ச சீலம் என்கிறது.

**கள்ளுண்ணாமை:**

கள்ளின் தீமை எப்படிப்பட்டது என்றால் மனிதனுடைய உணர்ச்சிகள் தூண்டப் பெற்று கோபத்தை மிகுதியும் வெளிப்படுத்தும். மது அருந்தாமை புத்த கொள்கையில் ஒன்று. இது மக்களின் அறிவை மயக்கும் தன்மை கொண்டது.

**பொய் பேசாமை:**

பொய் பேசாமல் இருத்தல் என்பது புத்தக் கொள்கை. பொய்மையான சொற்களை மட்டும் விட்டு விட்டு நலம் தரும் வார்த்தைகளினால் பேசுவது நல்லது என்று மணிமேகலை தன்னிடம் வருபவர் அனைவரிடமும் பொய்யின் தீமையினை எடுத்துக் கூறுகிறாள்.

**காமம் கொள்ளாமை:**

மனிதர்கள் ஒழுக்கத்தினின்று தவறுவதனால் தாம் அடையக் கூடாத பழியை அடைவர். இருமனங்களைக் கெடுப்பது காமமே. காம வெறியில் சிக்கிப் பரிதவிக்கும் நிலையை மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது.

கடியப்பட வேண்டிய கள், பொய், கொலை, களவு ஆகிய நான்கினையும் தன்பால் உடையது காமம் என்று காமத்தின் கொடுமை கூறப்படுகிறது.

**கொலை செய்யாமை:**

உலகில் தலை சிறந்த அறம் கொல்லாமை. அதனை நீக்கினால் எல்லா நன்மையும் கிட்டும். பிற உயிரையும் தம் சொந்த உயிராகப் போற்ற வேண்டும் எனப் புத்த சமயம் போதிக்கின்றது.

ஆவின் மகனான ஆபுத்திரன் தான் வளர்ந்த அந்தணர் பகுதியில் யாகத்திற்கென்று பலியிடுவதற்காகப் பசு ஒன்றைக் கட்டி வைத்திருக்க, அப்பசுவினை நள்ளிரவில் கவர்ந்து சென்றான். அப்போது அந்தணர்கள் ஆபுத்திரனை ஏளனம் செய்தனர். அதைப் பொருட்படுத்தாமல் அவர்களுக்கு உயிரின் உன்னத நிலையினைக் கூறினான் என்று மணிமேகலை குறிப்பிடுகிறது.



Scanned by CamScanner

**களவு செய்யாமை:**

'களவு' அல்லது 'திருட்டு' என்பது பிறருடைய பொருளை விரும்புதலே ஆகும். பிறருடைய பொருளை விரும்பக் கூடாது என்பதைப் புத்த சமயம் எடுத்துரைக்கிறது. களவினால் வரும் துன்பம் மிகப் பெரியது. இதனை,

“களவுஏர் வாழ்க்கையர் உறூஉம் கடுந்துயர்
இளவேய்த் தோளாய்க்கு இதுஎன வேண்டா
மன்பேர் உலகத்து வாழ்வோர்க்கு இங்கிவை
துன்பம் தருவன துறத்தல் வேண்டும்” (சி.வி.கா.126 -129 வரிகள்)

என்று துன்பம் தரக்கூடிய அனைத்தையும் துறத்தல் வேண்டும் என மணிமேகலை கூறுகிறது.

**பௌத்த மதத் தத்துவம்:**

பௌத்த மதத் தத்துவம் பன்னிரண்டு நிதானங்களை உடையது. அவை, பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம், வினைப்பயன் ஆகியனவாகும். இதனை,

“ பேதமை செய்கை உணர்வே அருவுரு
வாயில் ஊறே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
இற்றென வகுத்த இயல்பீ ராறும்
பிறந்தோர் அறியிற் பெரும்பேறு அறிகுவர்
அறியார் ஆயின் ஆழ்நர கறிகுவர்”
(ஆ.நா.அ.கா.105 - 110). வரிகள்)

என்று மணிமேகலை குறிப்பிடுகிறது.

**பௌத்தக் கோட்பாடு:**

சொல்லால், செயலால், மனதால் யாருக்கும் எந்த உயிருக்கும் துன்பம் விளைவிக்காமல் இருப்பதே பௌத்த நெறியின் அடிப்படைக் கோட்பாடாகும்.

“யாருடைய மனத்தையும் புண்படுத்தாதே
எந்த உயிருக்கும் தீங்கு விளைவிக்காதே
மற்ற உயிர்களுக்கு நன்மை செய்ய இயலாவிட்டாலும்
தீங்காவது எண்ணாமல் இருப்பாயாக!
மனிதர்கள் பால் மட்டுமல்ல
ஊமை விலங்குகள் பாலும்
அன்பும் கருணையும் காட்டுவாயாக”





என்று பௌத்தத்தின் அடிப்படை பற்றி ஒ.ரா.ந. கிருஷ்ணன் கூறுகிறார்.

எல்லா மக்களிடமும் அன்பு காட்டும் மனப்பான்மை, எல்லோரையும் சகோதரர்களாக நினைத்தல், துன்புறுவோர் யாராக இருந்தாலும் அவர்களுக்கு உதவி செய்து, அவர்களின் துன்பத்தைக் களைதல், தன்னலத்தைத் துறந்து பிறர் நலத்தை விரும்புதல் இவையெல்லாம் புத்த மதத்தின் சிறந்த கொள்கையாகும்.பௌத்த மதத்தின் அடிப்படைக் கோட்பாடு வினைக்கோட்பாடேயாகும். “செய்த வினையிலிருந்து எவரும் தப்ப முடியாது. மறுபிறப்பு எடுத்தேனும் அதை அனுபவித்தே தீர வேண்டும் என்பதே புத்தரின் கொள்கையாகும்”[6] என்று டாக்டர் முத்துச்சண்முகன் கூறுகிறார்.

**முடிவுரை:**

புத்த சமயம் மனித வாழ்க்கைக்குத் தேவையான இறைக்கொள்கைகளை எடுத்தியம்புகின்றன. அன்பு, அறம் போன்ற உயர்ந்த நெறிகளைக் கூறுகிறது. புத்தர் தோற்றுவித்த மதத்திற்கு ஆதரவு தந்து வாழ்வளித்த பெருமை நம் பாரத நாட்டிற்கு உண்டு. அதனால் தான், பூரண ஞானம் பொலிந்த நன்னாடு, புத்தர்பிரான் அருள் பொங்கிய நாடு என்று பாரதநாட்டைப் போற்றுகிறார் பாரதியார். புத்தர் மனிதனின் ஆன்மாவே அவனுக்கு வழிகாட்டும் ஒளியாகும் என்று போதித்தார். சாதி வேறுபாடு காட்டாமல் யாவருக்கும் தம் அருளுரைகளைப் போதித்து வழிகாட்டினார். துன்பத்திற்குக் காரணம் ஆசை. ஆசை அதிகமாகும்போது துன்பமும் அதிகமாகிக் கொண்டே செல்கிறது. ஆசையை அறவே ஒழிக்க வேண்டும் என்று புத்த மதம் கூறுகிறது. நல் பஞ்ச சீலங்கள் பற்றி புத்த மதம் எடுத்துரைக்கிறது. நல் ஒழுக்கங்களையும், இறைக் கொள்கைகளையும் மக்களுக்குப் புத்த சமயம் போதிக்கிறது.



Scanned by CamScanner